S-1

# தமிழ் இணையக் கல்விக்கழகம்
# சென்னை – 600 025.

## இளநிலைத் தமிழியல் – பட்டம் (B.A. TAMILOLOGY – Degree)
## மூன்றாம் ஆண்டு – ஆறாம் பருவம்

## ஜனவரி–பிப்ரவரி – 2025
## D061 இலக்கியத் திறனாய்வு

**காலம் : 3 மணி நேரம் மதிப்பெண்கள் : 75**

(குறிப்பு : பிரிவு – 1இல் இருந்து எல்லா வினாக்களுக்கும் விடை தர வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு – 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு – 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)

### பிரிவு – 1

**ஒரு சொல் / ஒரு தொடரில் விடை தருக. (15x1=15)**

1. திறனாய்வின் அடிப்படை பண்பு எது?
2. மனித சமுதாயத்தின் மனச்சான்று இலக்கியம் எனக் கூறியவர் யார்?
3. கலைகள் எத்தனை?
4. இலக்கியத்தை ஆய்வு செய்ய எந்த அறிவு தேவை?
5. நிறைகளை மட்டுமே பேசுவது எவ்வகைத் திறனாய்வு?
6. அணுக்கம் என்பதற்கான வேறு சொல் யாது?
7. வடிவம் என வழங்கப்படுவது எது?
8. உளவியல் அணுகுமுறையுடன் தொடர்புடையது எது?
9. **முட்டாச் சிறப்பின் பட்டினம்** எந்நூல் வரி?
10. இறையனார் களவியல் உரையின் சிறப்பு யாது?
11. பத்துப்பாட்டு முழுமைக்கும் உரை எழுதியவர் யார்?
12. சிலம்புச் செல்வர் என அழைக்கப்பட்டவர் யார்?
13. மணிக்கொடி இதழின் சிறப்பு யாது?
14. பெண்ணியம் என்பதன் ஆங்கிலப் பதத்தைக் கூறு.
15. Diaspora என்பதன் தமிழ்ச்சொல் யாது?

## பிரிவு – 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒரு பத்தி அளவில் விடை தருக.** **(5x3=15)**

1. திறனாய்வாளரின் பணிகள் எவை?
2. கலைகளின் வகைகளைக் குறிப்பிடுக.
3. அணுகுமுறைத் திறனாய்வு என்றால் என்ன?
4. தொன்மம் என்ற சொல்லிற்குரிய பொருளையும், அதன் பிற பெயர்களையும் எழுதுக.
5. இலக்கிய உரைகளின் அமைப்புகள் எவை?
6. மார்க்சியத் திறனாய்வாளர்களுள் மூவரைக் குறிப்பிடுக.
7. புலம்பெயர் படைப்பாளர்களுள் சிலரைக் குறிப்பிடுக.
8. தலித் என்ற சொல்லின் பொருள் யாது?

## பிரிவு – 3

**மூன்று பக்கக் கட்டுரை வடிவில் விடை தருக.** **(3x15=45)**

1. (அ) கலையும் இலக்கியமும் குறித்துக் கட்டுரைக்க.

(அல்லது)

(ஆ) திறனாய்வு குறித்து விவரி.

2. (அ) உரை குறித்தும் உரையாசிரியர் குறித்தும் விவரி.

(அல்லது)

(ஆ) திறனாய்வு முன்னோடிகளுள் சிலரைக் குறித்து கட்டுரை வரைக.

3. (அ) அமைப்பியல் வரலாறு குறித்து விவரி.

(அல்லது)

(ஆ) தலித் இலக்கியம் குறித்து கட்டுரை வரைக.

❋ ❋ ❋